www.padippakam.com

17-7-91

# சிறுவர் அமுதம்

ஆடி - 1

10/06/92

கிண்ணம் 2 எண்ணம் 7

»CHANCHIVE«
Postbox: 1205
7500 Holstebro . Danmark




## சிறுவர் இலக்கிய மாத சஞ்சிகை

படிப்பகம்

www.padippakam.com

மிகச்சிறந்த உண்மைகள் எளிமையாக உள்ளன. தலை சிறந்த மனிதர்களும் அப்படித்தான் இருக்கின்றார்கள்.

ஹேர்'

## எண்ணம்

அன்புச்சிறுவர்களே,

கடந்த ஆனி இதழில் நான் சொல்லியிருந்த விடயங்கள் ஞாபகமிருக்கும் என நினைக்கின்றேன். அவை உண்மையாகி விடுமோ என்று பயப்படவேண்டியிருக்கின்றது சில இடங்களில் கொடுக்கப்பட்டுள்ள கடதாசித்துண்டுகளால் எந்தவிதமான பிரயோசனமும் இல்லை என்பதைப் பார்க்கும் போது என்னவோ ஏதோ என்று மனம் பயப்படுகின்றது. இதை இன்னும் நம்மவர்கள் பலர் நம்பவில்லை. "இப்படி எத்தனை தரம் அனுப்புவதாய்ச் சொல்லி வெருட்டிப்போட்டான்." "இது நடக்காது, அனுப்ப ஏலாது." என்றுதான் பேசிக்கொள்கின்றார்கள்.



படிப்பகம்

www.padippakam.com

'திருப்பியனுப்புகின்றது செய்தியாக மட்டும் இருந்துவிட்டால் பரவாயில்லை. அதில் நன்மை உண்டு. ஆனால் செய்கையாகத் தொடங்கிவிட்டால்? அதுவும் இன்றைய இலங்கையின் நிலையில்? இதைவிட அநீதி என்று உலகில் எதுவும் இருக்கமுடியாது.

எந்த ஒருவனும் தன்னுடைய நாட்டிற்குப்போகப் பயப்படமாட்டான். ஆனால், தமிழர்களின் நிலை ஏதோ கொலைக்களத்திற்குள் தள்ளுவது போன்ற நிலையில்தான் அவர்களுடைய நாடிருக்கின்றது. நாடு முழுவதுமே இன்று கொலைகளும் சூடக் குரல்களும், வழமையான கடன்களாகிவிட்டன. இந்தநிலையில் (தமிழர்களிற் சிலர் திருப்பி அனுப்பப்படவுள்ளனர்) ஏதோ ஐம்பது வருடங்களுக்கு முன்னர் பார்ப்பது போல மனித உயிர்களை இன்றைய ஜேர்மன்அரசு பார்ப்பது கவலையைத் தருகின்றது.

உண்மையிலே தமிழர்கள் நாடு திரும்புவதில் அங்குள்ள நிலைமைகளே தடையாகின்றன. அந்தத்தடைகள் இருக்கும் வரைதான் இந்தஅரசு இப்படியான முடிவை எடுக்கவேண்டியிருக்கும். தடைகள் நீங்கி நாட்டில் அமைதிஏற்பட்டுவிட்டால்? அந்த முடிவை எடுப்பவர்கள் தமிழராகவே இருப்பார்கள்.

அன்புடன்,
ஆசிரியர் 'சிறுவர் அமுதம்'



படிப்பகம்

www.padippakam.com

# ஆனிமாதச் சிறுவர் அமுதம்

ஆனி மாத இதழை நீங்கள் எவ்வளவிற்கு விளங்கியிருக்கின்றீர்கள்? அதிலிருந்து மேலும் எவ்வளவு அறிய முயற்சித்திருக்கின்றீர்கள்? என்பதை அறியச் சில கேள்விகள் தரப்படுகின்றன. இவைகளுக்கான பதில்களை 25.07.91ற்கு முன்னர் அனுப்பிவையுங்கள்.

இது போன்ற பகுதி ஒவ்வொரு மாதமும் இடம் பெறும்.

1) பின்வரும் மூன்று கேள்விகள் ஆனி மாத அட்டைப்படம் சம்பந்தமானவை.

அ) மூவரும் இலங்கைப்படத்தைப் பிழையாக வைத்துப் பார்க்கின்றார்கள் என்று ஒருவர் சொல்கின்றார். அதற்கு மற்றவர் அது பிழையல்ல என்று ஒரு விளக்கம் சொல்கின்றார்.அந்த விளக்கம் என்னவாக இருக்கும்?

ஆ) அட்டைப்படத்தில் மூவரும் எந்தத்திசைக்கு எதிராக இருக்கின்றனர்?

இ) தாத்தாவின் விரல் சுட்டிக்காட்டும் இடத்தின் பெயர் என்ன? அங்கு இருப்பவற்றில் முக்கியமானவை என்று எவற்றைக் குறிப்பிடுவீர்கள்?

2) பகைக்கு நகை என்பதில் நகை என்பது என்ன அர்த்தத்தில் வந்துள்ளது?.

3) வீரமாமுனிவர் என்றதும் சிரிப்புக்கதை ஒன்று ஞாபகத்திற்கு வரும். உங்களுக்கு அது என்ன கதை என்று தெரிந்தால், அதன் பெயரைக்குறிப்பிடுங்கள்.



படிப்பகம்

www.padippakam.com

4) உயிரினங்களில் இருதயத்துடிப்பு மிக வேகமாக உள்ளது ஒரு மிருகத்திற்குத்தான் அந்த மிருகம் எது?அதற்கு என்ன காரணம்?

5) சந்திரபோஸ் என்றதும் முதலில் எல்லோருக்கும் ஞாபகத்தில் வருபவர் ஒருவர் இந்தியாவில் இருந்திருக்கின்றார். அவர் விஞ்ஞானி ஜகதீஷ் சந்திரபோஸ் அல்ல! யார் அவர் என்று யாரிடமாவது கேட்டறிந்து எழுதுங்கள்.

6) 32ம் பக்கத்தில் வில்லியம் பார்டன் சொல்லியுள்ள பொன்மொழியிலிருந்து உங்களுக்கு என்ன விளங்குகின்றது?

7) ஆனி இதழில் பல நாடுகளின் பெயர்கள் இடம்பெற்றுள்ளன. அவற்றையும் குறிப்பிட்டு, அவற்றின் தலைநகரங்களையும் குறிப்பிடுங்கள் (ஜெயபுரியைக் குறிப்பிடவேண்டாம்)

8) வேலணைக்கு ஒல்லாந்தர் லேய்டன் என்று பெயர் வைத்தது போல வேறு சில இடங்களுக்கும் தங்களுடைய நாட்டில் உள்ள பெயர்களை வைத்திருக்கின்றார்கள். இரண்டு பெயர்களைக்குறிப்பிடுங்கள்.

**இனியும் நாங்கள் நிகழ்ச்சிகளைக் கற்பித்துக் கொண்டிருக்காமல், கருத்துக்களையும் கற்பிக்கத் தொடங்கவேண்டும். இல்லையேல் கற்பித்தலில் எந்தவித பயனும் இல்லை.**

**அனடோல் ஃபிரான்ஸ்**



படிப்பகம்

www.padippakam.com

# இலங்கைத் தெனாலிராமன்

* * * * *

## மீசை வளரும் வரை


அந்தரே சிறுவனாக இருந்த போது தன் வீட்டின் அயலில் வசிக்கும்
முடிதிருத்தும்(முடிவெட்டும்)தொழிலாளியுடன் தமாஷ் செய்யவேண்டும் என்று நினைத்துக் கொண்டான்.

ஒருநாள் அந்தரே முடிதிருத்துபவரின் வீட்டிற்குச் சென்றான். அந்தரேயைக் கண்டதும் முடிதிருத்துபவர்' என்ன அந்தரே இந்தப்பக்கம்? என்றார். இங்கு வருபவர்கள் முடிவெட்டிக் கொள்ளத் தானே வருவார்கள் என்றான் அந்தரே பதிலாக. அப்படியென்றால் உட்காருங்கள் என்று முடிதிருத்துபவர் அந்தரேயிடம் கூறினார். சிறுவனான அந்தரே பெரிய மனிதர்களின் தோரணையில் நாற்காலியில் ஏறி அமர்ந்து கொண்டான். இனி வேலையைத் தொடங்கலாம் என்றான். முடிதிருத்துபவர் அந்தரேயின் கழுத்தைச் சுற்றி ஒரு நீளத்துண்டைக் கட்டினார். சவர்க்காரத்தை நுரை வரும்படி கரைத்தார். தும்புப் பிரஷால் அதை எடுத்து அந்தரேயின் முகத்தில் தடவினார். அந்தரேயை முகத்தை மேலே வைத்துக் கொள்ளும்படி சொல்லி விட்டு அவர் வேறு வேலைகள் செய்யத் தொடங்கினார்.



படிப்பகம்

www.padippakam.com



அந்தரே நீண்ட நேரமாக மேலே பார்த்துக் கொண்டிருந்தான். சவரம் செய்வதாகத் தெரியவில்லை. 'முகத்தில் சவர்க்காரத்தைப் பூசிவிட்டு நீர் என்ன பார்த்துக் கொண்டிருக்கின்றீர்? என்று எரிச்சலுடன் கேட்டான். அதற்கு முடிதிருத்துபவர்' முகத்தில் மீசை வளரட்டும்' என்று தான் பார்த்துக் கொண்டிருப்பதாகச் சொன்னார்.

அந்தரேக்கு வெட்கம் வந்துவிட்டது. காய்ந்த சவர்க்கார நுரையுடன் வீடு போய்ச்சேர்ந்தான்.



படிப்பகம்


# அந்தரே தப்பி ஓடியது

அந்தரே செய்யும் கேலிக்கூத்துக்களால் அவனது பெயர் பிரபலமானது. அவனுடைய பெயரைக்கேள்விப்படாதவர்களே இல்லை எனலாம் அந்தரேயைச் சந்திக்க அரசருக்கு ஆவலாக இருந்தது. அதை அவர் காட்டிக் கொள்ளாமல், அந்தரேயைப் பிடித்து வாருங்கள்' என்று அரச அதிகாரிகளுக்கு ஆணை இட்டார்.

அவர்கள் ஒருமாதிரியாக அந்தரேயைத் தேடிப்பிடித்து விட்டார்கள். அரசரிடம் இழுத்துச் சென்றார்கள். போகும் வழியில் அந்தரே'நீங்கள் என்னை அடித்து விட்டதால் வயிற்றைக்கலக்குகிறது என்றான். அரசு அதிகாரிகள் அவனது வயிற்றில் ஒரு கயிற்றைக் கட்டி அந்தப் பற்றை மறைவில் போய் இரு என்று சொல்லி அனுப்பினார்கள்.

அந்தரே பற்றை மறைவில் இருந்து விட்டு ஆற்றங்கரைக்குக் கால் கழுவச்சென்றான். அங்கு காலைக் கழுவுவது போலப் பாசாங்கு செய்து கொண்டு தனது இடுப்பில் கட்டியிருந்த கயிற்றை அவிழ்த்துக் கொண்டான். மெதுவாகத் தப்பி ஓடித் தொடங்கினான்.

www.padippakam.com



நீண்ட நேரமாகியும் அந்தரேயைக் காணாமல் அதிகாரிகள் கயிற்றை இழுத்துப்பார்த்தார்கள். கயிற்றை இழுக்க முடியவில்லை. அந்தரே ஆற்றங்கரையில் இருந்த கல்லொன்றில் கயிற்றைக் கட்டி விட்டுத் தப்பிவிட்டான். அதிகாரிகள் வந்து பார்த்த போது அந்தரே தூரத்தில் ஓடிக்கொண்டு "கயிறு ஆற்றிலே அந்தரே விட்டிலே" என்று சொல்லியவாறு ஓடிக் கொண்டிருந்தான். அதிகாரிகள் அவனைத் துரத்திச் சென்றனர்.

ஓடிச் சென்ற அந்தரே ஆற்றங்கரையின் அருகே நின்ற தென்னை மரத்தில் தாவி ஏறினான். அதிகாரிகளில் ஒருவனும் கயிற்றை வட்டமாகச் சுற்றித் தொடம் போட்டுக் கொண்டு தென்னை மரத்தில் ஏறினான். அதிகாரி ஒருவன் மரத்தில் ஏறுவதைக் கண்டதும் தன் இடுப்பில் செருகி வைத்திருந்த கத்தியை



படிப்பகம்

www.padippakam.com

எடுத்து, இரண்டு தென்னை ஓலைகளை வெட்டினான். இரண்டு ஓலைகளையும் கையில் இறுக்கமாகப் பிடித்துக் கொண்டு ஒரு பறவை பறப்பதைப் போல ஆற்றின் அடுத்தகரைக்குத் தாவினான்.

அடுத்தகரையில் போய் இறங்கிய அந்தரே அதிகாரிகள் வரமுன்னர் அந்த இடத்தை விட்டு ஓட்டம் எடுத்தான்.

---

கானமயிலாடக் கண்டிருந்த வான்கோழி.. என்று தொடங்கும் பாட்டு ஔவையாரால் எழுதப்பட்டதாகச் சொல்லப்படும் மூதுரை அல்லது வாக்குண்டாம் என்ற நீதிநூலில் வருகின்றது.

இந்தப்பாட்டு எழுதப்பட்ட காலத்தில் இந்தியாவில் வான்கோழியே இல்லை.

வான்கோழியின் காலம் பிந்தியகாலமாகும். மேலைநாட்டு ஆய்வாளர் ஒருவர் வான்கோழி என்பதில் தவறு இருப்பதாகச் சுட்டிக்காட்டியுள்ளார் அது வாங்கோழி என்று தான் எழுதப்பட்டிருக்க வேண்டும் என்று முடிவாகியுள்ளது. வாங்கோழி என்பது கோழியையே குறிக்கின்றது. வான்கோழி எனப்படும்TURKEY அண்மைக்காலத்தைச் சேர்ந்த பறவை இனமாகும்

**********************************************



படிப்பகம்

## ஆடிமாத வினாவிடைப் போட்டி

இம்முறை ஊர்கள் விடைகளாக வருகின்ற வினாக்கள் வருகின்றன. இனி ஒவ்வொரு மாதமும் வினாவிடைப்போட்டி தொடர்ந்து வரும். உங்களுக்குப் போதுமான கால இடைவெளி இருக்கக்கூடியதாகவே முடிவு திகதி இருக்கும். இந்த மாத வினாவிடைப் போட்டியின் முடிவுதிகதி25.07.91ஆகும்.

1) இலங்கையில் இரண்டெழுத்தில் உள்ள ஊரின் பெயர் என்ன?

2) எமது ஊர்களின் பெயர்களிற் சில 'குளம்' என்று முடிகின்றன. குளம் என்று முடிகின்ற ஐந்து ஊர்களின் பெயர்கள் எழுதுங்கள்.

உதாரணம் : மாங்குளம்.

3) கிளி, கொக்கு, காகம், போன்ற பறவைகளின்பெயருடன் உள்ள ஊர்களின் பெயர்கள் மூன்று எழுதுக.

உதாரணம்=கிளிவெட்டி

4) புலி, யானை, கரடி, பன்றி, போன்ற மிருகங்களின் பெயருடன் உள்ள ஊர்கள் நான்கு எழுதுக.

உதாரணம்=ஆனைக்கோட்டை

www.padippakam.com

5) யாழ்ப்பாணத்தின் மேற்கே இருந்த தீவுகளிற் பல தரைப்பாதை மூலம் இணைக்கப்பட்டுவிட்டன. ஆனால் இன்னும் நான்கு தீவுகள் இணைக்கப்படாமல் தீவாகவே உள்ளன. அந்த நான்கு தீவுகளின் பெயர்கள் என்ன?

6) கே.கே.எஸ்(K.K.S.)என்றும் வி.வி.ரி(V.V.T)என்றும் அழைக்கப்படும் ஊர்களின் பெயர்களை எழுதுங்கள்.

7) இலங்கையின் சர்வதேசவிமான நிலையம் அமைந்துள்ள இடத்தின் பெயர் என்ன?

8) இணைந்த ஜேர்மனியின் தலைநகராக எந்த இடம் அமையப்போகின்றது?

9) யாழ்ப்பாணத்தின் விமானநிலையம் அமைந்துள்ள இடத்தின் பெயர் என்ன?

10) JAFFNA, KAYTS, POINTPEDRO, DELFT இந்தப் பெயர்கள் குறிக்கும் இடங்களின் தமிழ்ப் பெயர்கள் எவை?

இந்தப் பத்து வினாக்களின் விடைகளுடன்,
வைகாசி இதழ் பற்றிய விடைகளையும்
ஆனி இதழ் பற்றிய விடைகளையும்
ஆடி மாத விடுகதைப் போட்டி விடைகளையும் 25.07.91ற்குப் பிந்தாமல் முன்னர் அனுப்பிவைக்கவும்.



படிப்பகம்

# ஓநாயும் சிறுவனும்

ஓர் ஊரில் ஒரு சிறுவன் இருந்தான். அவன் யாருடைய சொல்லையும் கேட்பதில்லை. "பொய்சொன்னவாய்க்குப் பொரியும் கிடையாது" என்பதை உண்மையாக்கும் விதத்தில் எந்தநேரமும் பொய்யே பேசிய அவன், சாப்பாட்டிற்குக் கஸ்டப்பட்டான். முதியவர் ஒருவர் சிறுவன் மீது இரக்கப்பட்டார். ஒரு விலாசத்தைக் கொடுத்தார். இந்த இடத்திற்குப் போ உனக்கு வேலை கிடைக்கும் என்று சொன்னார். பசியால் வாடிய சிறுவன் முதியவர் கொடுத்த விலாசத்திற்குச் சென்றான்.

அந்த விலாசத்தில் ஒருவர் இருந்தார். சிறுவனிடம், 'இங்கு ஆடு மேய்க்கின்ற வேலை இருக்கின்றது செய்வாயா?' என்று கேட்டார்.. சிறுவன் அந்த வேலையைச் செய்வதாகச் சொன்னான்.

பசியால் மெலிந்து நலிந்து போயிருந்த சிறுவன், வேலையும், வேளைக்கு வேளை சாப்பாடும் கிடைத்திருந்ததால், மகிழ்ச்சியாக இருந்தான். நாட்கள் செல்லச் செல்லப் பழையபடிகுழப்படிகள் செய்யவும், பொய் பேசவும் தொடங்கினான்.

ஒருநாள் வயல்வெளியில் ஆடு மேய்த்துக் கொண்டிருக்கும் போது திடீரென்று 'ஐயோ ஓநாய்! ஐயோ ஓநாய்!! என்று அலறி அடித்துக்கத்தினான். பக்கத்து வயல்களில் வேலை செய்வோர் பதறி விழுந்தடித்துக் கொண்டு, தடிகளுடன் ஓடி வந்தார்கள். அவர்கள்

www.padippakam.com

அருகில் வந்ததும், கலகலவென்று சிரித்தான். என்ன தம்பி ஓநர்ய் ஓநாய் என்று கத்தினாயே? இப்ப எங்களைக் கண்டதும் சிரிக்கின்றாயே? என்று அவர்கள் கேட்டார்கள். அதற்கும் அவன்சிரித்தான். ஏதோ விளையாட்டுக்கு இப்படிக் கத்தியிருக்கின்றான். என்று சொல்லிக் கொண்டு அவர்கள் திரும்பிச் சென்றார்கள்.

வயலில் வேலை செய்து கொண்டிருந்தவர்களை ஏமாற்றியதை நினைத்துச் சிறுவன் சந்தோசப்பட்டான். இன்னும் ஒருநாளைக்கு இவர்களை ஏமாற்ற வேண்டும் என்று மனதிற்குள் சொல்லிக் கொண்டான்.



ஆனால், அவனது மனம் இன்னொரு நாள்வரை காத்திருக்கவில்லை. அடுத்தநாள் ஆடு மேய்த்துக் கொண்டிருக்கும் போதும் திடீரென 'ஐயோ ஓநாய்! ஐயோ ஓநாய்!! என்று அலறியடித்துக்கத்தினான். பக்கத்து வயலில் வேலை செய்து கொண்டிருந்தவர்கள்




படிப்பகம்

விழுந்தடித்துக் கொண்டு வந்தார்கள். அவர்கள் அருகே ஓடிவந்ததும் சிறுவன் சிரித்தான். அவர்களுக்குக் கோபம் வந்துவிட்டது. அவர்கள் கொண்டு வந்த தடிகளால் சிறுவனுக்கு அடி போட்டார்கள். இனிமேல் இப்படிக்கத்தினால் காலை முறித்துப் போடுவோம் என்று பேசிவிட்டுச் சென்றுவிட்டார்கள். 'அடியாத மாடு படியாது' என்பதைப் போல அடியின் பின்னர் திருந்திவிட்டான்.

பின்னர் ஒருநாள் சிறுவன் வயலில் ஆடுகளை மேய்த்துக் கொண்டிருந்தான். அப்பொழுது உண்மையாகவே ஓநாய் ஒன்று வந்துவிட்டது. ஐயோ ஓநாய்! ஐயோ ஓநாய்!! என்று பயத்தில் கத்தினான். கதறி அழுதான். பக்கத்து வயல்களில் வேலை செய்து கொண்டிருந்தவர்களுக்குச் சிறுவனின் சத்தம் கேட்டது. ஆனால் அவர்கள்' இந்தப்பொடியனுக்கு வேறு விளையாட்டே கிடையாது ஓநாய் ஓநாய் என்று கத்துவது தான் வேலை என்று சொல்லிக் கொண்டார்கள். சிறுவனிடம் ஓடிப் போகவில்லை. யாரும் உதவிக்கு வராததால் சிறுவன் ஓநாயிடம் கடிவாங்கி இறந்து போனான்.

ஓநாய் ஓநாய் என்று சொல்லிக் கடைசியில் ஓநாயே வந்துவிட்டது.
பகிடிக்கும் பொய் சொல்லக் கூடாது' என்பதை இக் கதையிலிருந்து நாம் அறிகின்றோம் அல்லவா?

## யானை



யானை காட்டில் வாழும் மிருகம். அது எல்லா மிருகங்களிலும் பெரியது. கூடிய பலமும் உள்ளது. அதன் கண்கள் மிகச் சிறியவை. அதன் காதுகள் பெரியவை. சுளகு போலப் பெரியதாக அவை இருக்கும். யானையின் மூக்கு நீண்டு வளைந்திருக்கும். அதைத் தும்பிக்கை என்று சொல்வார்கள். யானைக்குத் தும்பிக்கை மிகவும் உதவியாக இருக்கின்றது. தும்பிக்கையினால் நீரை உறிஞ்சி வாய்க்குள் விட்டுக்குடிக்கும்.

யானை தனது தும்பிக்கையினால் பெரிய மரத்தைத் தூக்கும். சிறிய ஊசியையும் எடுத்துவிடும். ஆண்யானையின் பற்களில் இரண்டு வெளியே தெரியும். அது தந்தம் எனப்படும்.

யானையின் வால் சிறியது. அதன் நுனியில் குஞ்சம் போன்ற தடித்த மயிர்கள் காணப்படும். யானை இலை குழை, தழை, ஓலை, பழங்கள் என்பவற்றை உண்ணும். கரும்பை அது விரும்பித் தின்னும்.

ஆக்கம்- செல்வி சிவதர்சினி சிவராஜா
4100 DUISBURG 28

www.padippakam.com

## டீசல்

நில எண்ணெய் என்றதும் உங்களுக்குப் பெற்றோல், டீசல் மண்ணெண்ணெய், ஒயில் என்று பல ஞாபகத்திற்கு வரும். டீசல் என்று உள்ள எண்ணெய்க்கு, அது கண்டுபிடிக்கப்பட்ட போது டீசல் என்று பெயரில்லை. ஆனால் அந்த எண்ணெயில் ஓடக்கூடிய வாகனத்தை ருடோல்ப் டீசல் என்பவர் கண்டுபிடித்தார். அதன் பின்னர் அந்த எண்ணெய்க்கு அவருடைய பெயரே வந்து விட்டது.

ஆரம்பகாலங்களில் நிலக்கரியிலிருந்து எடுக்கப்பட்ட எண்ணெய் விளக்கு எரிக்கப் பயன்பட்டது. திமிங்கிலத்தின் எண்ணெயினால் மெழுகுவர்த்தி தயாரித்தார்கள்.

திமிங்கிலத்தின் எண்ணெய் அதிகமாகக் கிடையாததால், நிலக்கரி எண்ணெயிலிருந்து மெழுகுவர்த்தி செய்ய முடியுமா?என்று ஆராய்ச்சிகள் நடைபெற்றுக் கொண்டிருந்தன. இந்த நேரத்தில் 1854ல் பூமிக்கடியில் எண்ணெய் இருப்பதைக் கண்டுபிடித்தார்கள். இந்த எண்ணெயைச் சுத்தம் செய்தால் பல தொழில்களுக்குப் பயன் படுத்தலாம் என்று கண்டறிந்தனர்.



படிப்பகம்

www.padippakam.com

நில எண்ணெய்களில் ஒன்றான டீசலில் ஓடக்கூடிய இயந்திரத்தைக் கண்டுபிடித்த ருடொல்ப் டீசல் RUDOLF DIESEL 1858ம் ஆண்டு ஜேர்மனியின் பையரேனில் பிறந்தார். தந்தை இரும்புப் பட்டறையில் வேலை செய்து வந்தார் மகனை முஞ்சன் MUNCHEN தொழில் நுட்பக்கல்லூரியில் சேர்த்தார். அந்தக் கல்லூரியில் டீசல் மிகவுந் திறமையான மாணவனாகத் தேறினார்.

முஞ்சனில் டீசல் தங்கியிருந்த போது டாக்டர் கார்லின் சொற்பொழிவைக் கேட்கமுடிந்தது. நீராவி இயந்திரங்கள் எரி பொருளின் சக்தியைப் பெருமளவு வீணாக்குவதைக் கார்லின் கண்டுபிடித்திருந்தார்.

அவருடைய சொற்பொழிவும், சிகரெட் பற்றவைத்த லைட்டரும் டீசலின் சிந்தனையைத் தூண்டின. லைட்டருக்குச் சிறு பொறியின் மூலம் தீ வெளிப்படுவதைப் போல; இதே முறையில் தீப்பொறிகளின் மூலம் சக்தியை உண்டாக்கி அவற்றை இயக்கினால் என்ன? இப்படி முடியுமா? என்ற சிந்தனையின் விளைவாக அவரது மனதிற்குள் இயந்திரம் உருவானது. அப்போது டீசலுக்கு முப்பத்தைந்து வயது. 1893ம் ஆண்டு தனது மனதிற்குள் தோன்றிய இயந்திரத்தின் வரைபடத்தின் விளக்கப் படங்களை வெளியிட்டார். டீசலின் திறமையை அறிந்த பலர் அவர் தயாரிக்க விரும்பும் இயந்திரத்திற்கு நிதிஉதவி செய்து முதலிட முன்வந்தனர். அவர்களில் குருப் என்பவர் முக்கியமானவர் ஆவார்.



படிப்பகம்

www.padippakam.com

குறைந்த கால இடைவெளியில் டீசலின் இயந்திரம் வெளிவந்தது. பெரும் வரவேற்பும் பெற்றது. ஐரோப்பா எங்கும் டீசலின் இயந்திரங்களாகவே இருந்தன. இதனால் ஐந்து நாடுகளில் தொழிற்சாலைகளை அமைத்துத் தனது டீசல் இயந்திர உற்பத்தியை அதிகரிக்கச் செய்தார்.

சகலவிதமான சுகபோகங்களுடனும் புகழுடனும் வாழ்ந்த டீசல் ஒருநாள் தன் மகனுடன் கதைத்துக் கொண்டிருந்த போது தற்கொலை பற்றிய பேச்சு வந்தது. சுலபமாக எந்தவிதமான துன்பமும் இல்லாமல் எந்த மாதிரியான தற்கொலை இருக்கிறது? என்று மகனைக் கேட்டார். அதற்கு மகன் 'கப்பல் பயணத்தின்போது கடலில் குதித்தால் அது குறைந்த அளவில் துன்பப்பட வேண்டிவரலாம் மற்ற முறைகளை விட இது தான் இலகுவானது என்று கூறினான்.

ஒருமுறை டீசல் அமெரிக்கா சென்று கப்பலில் திரும்பிக் கொண்டிருந்தார். கப்பல் ஆங்கிலக்கால்வாயில் வந்து கொண்டிருந்தது. திடீரென்று டீசலைக் காணவில்லை. கப்பல் முழுவதும் தேடினார்கள். டீசல் அகப்படவில்லை. எல்லோரும் கவலையடைந்தனர்.

ஒரு வாரத்திற்குப் பின்னர் சடலம் ஒன்று கால்வாயில் மிதந்து வந்தது. டச்சுப்படகில் வந்தவர்கள் அதை எடுத்தார்கள். அது டீசலின் சடலம் என்று தெரியவந்தது.



படிப்பகம்

www.padippakam.com

டீசல் ஏன் தற்கொலை செய்து கொண்டார் என்பது ஒரு வருடமாக மர்மமாக இருந்தது. டீசலின் மகன் எழுதிய டீசலின் வரலாறு புத்தகமாக வெளிவந்த போது தான் புரிந்தது.

டீசலின் இயந்திரங்கள் உலகின் பல நாடுகளில் விற்கப்பட்டன. இதனால் டீசலுக்கு வருமானமும் புகழும் கூடின. ஆனாலும் டீசல் அவற்றோடு திருப்தி அடையவில்லை. இன்னும் வருமானமும் புகழும் கூட வேண்டும் என்று பேராசைப் பட்டார். தனது வருமானங்களுடன் பலரிடம் கடனும் வாங்கிச் செலவு செய்தார். அவருடைய பேராசைகளினால் ஒருவகையில் மனம் உடைந்த நிலையில் தற்கொலை செய்து கொண்டார் என்று தெரியவந்தது.

வாழ்வதில் நான் எனது தந்தைக்குக் கடமைப்பட்டிருக்கின்றேன். ஆனால், முறையாக வாழ்வதில் நான் எனது ஆசிரியருக்குக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

'மகா அலெக்ஸாண்டர்'

கற்பிக்கத் தெரியாதவன் எவனும் பூரண அறிவு பெற்றதாக நான் ஏற்றுக்கொள்ளமாட்டேன்.

'அரிஸ்டாட்டில்'



படிப்பகம்

www.padippakam.com

# விடுகதைப்போட்டி

1) தெரிந்து பூப்பூக்கும் தெரியாமல் காய்காய்க்கும். அது என்ன?

2) ஒரு கால் மனிதனுக்கு வயிறெல்லாம் முட்டை. யார் அந்த மனிதன்?

3) ஒன்பது பிள்ளைகளுக்கும் ஒரே குடுமி. அது என்ன?

4) ஓட்டம் நின்றால் ஆட்டம் நிற்கும் அது என்ன?

5) ஓடையில் ஓடுவதுமில்லை. ஒருவரும் குடிப்பதுமில்லை. அது என்ன?

விடைகளை 25.07.91ற்கு முன்னர் பிந்தாமல் அனுப்பிவைக்கவும்.

** இரும்புப்பாலம், சீமேந்துப்பாலம், மரப்பாலம் என்று பலவகையான பாலங்களைப் பற்றிக் கேள்விப்பட்டிருக்கின்றோம். சிலவற்றைப் பார்த்திருக்கின்றோம். ஆனால், சீனாவில் (CHINA)முழுவதும் பீங்கானிலான பாலமொன்றை பெசின் என்னும் இடத்தில் கட்டியிருக்கின்றார்கள்.



படிப்பகம்

www.padippakam.com

# எக்ஸ்-ரே கதிர்

** X-RAY ஏதோ கதிர் என்ற அர்த்தம் உள்ள எக்ஸ்ரேயைக் ரொன்கன் என்னும் ஜெர்மன் விஞ்ஞானி கண்டுபிடித்தார். இவர் ஏதோ ஒன்றைக் கண்டு பிடிக்க ஆராய்ச்சி செய்துகொண்டிருக்கும் போது இவர் தயாரித்து வைத்திருந்த கலவையிலிருந்து ஒருவகையான கதிர்கள் பாய்ந்தன. அந்தக் கதிர்கள் என்னவென்று கையைப் பிடித்துப் பார்த்தார். கதிர்கள் பாய்ந்து கொண்டிருந்த சுவரில் இவரது கையின் உருவம் தெரிந்தது. கையின் உட்பாகத்தில் உள்ள எலும்புகள் தெளிவாகத் தெரிந்தன. இப்படியான ஒன்றைக்கண்டுபிடிப்பதில் இங்கிலாந்தின் விஞ்ஞானிகள்வெகு சுறுசுறுப்பாக ஆராய்ச்சிகள் செய்து கொண்டிருந்தனர்.

தான் கண்டு பிடித்த கதிர் என்னவென்று அவரால் சொல்லமுடியவில்லை. அதை அவர் ஏதோ கதிர்xrayஎன்று சொல்லிக்கொண்டார். ஆனால் மற்றவர்கள் ரொன்கன் கதிர்'என்று அழைத்தார்கள். இந்த எக்ஸ்ரே ஆரம்பத்தில் உடலின் உள்ளுறுப்புக்கள் பற்றி ஆராய்வதற்கே பயன் பட்டது. இன்று பலதுறைகளில் இது பயன் படுகின்றது.

பரிசோதனை நிலையங்கள், தொழிற்சாலைகள், விண்வெளிஆய்வு, என்று பல துறைகளில் இது பயன்படுகின்றது. எதிர்காலத்தில் இன்னும் இது பல துறைகளில் பயன்படலாம் என்பது உண்மை.



படிப்பகம்

www.padippakam.com

WILHEM CONRAD RONTGEN(1845-1923) நூரம்பேர்க்கைச் சேர்ந்தவர். பௌதீகத்துறை விஞ்ஞானி ஆவார். இவரது கண்டுபிடிப்பான எக்ஸ்-ரேயை ஜேர்மன் மக்கள் இன்றும் ரொன்கன்கதிர் என்றே அழைக்கின்றார்கள்.

** இரண்டு இரும்புத் துண்டுகளை இணைப்பதை வெல்டிங் என்று சொல்கின்றோம். உடம்பில் ஏற்படும் காயங்களையும், புண்களையும் வெல்டிங் மூலம் குணப்படுத்திவிடமுடியும் என்று அமெரிக்காவில் உள்ள டாக்டர் டக்ளஸ் டியூ என்பவர் செய்து காட்டியிருக்கின்றார். இந்த முறையைச் செய்து கொள்ள மருத்துவர்கள் கையுறை, முகமுடி. ஒன்றும் விசேடமாக அணியவேண்டியதில்லை. கொம்பியூட்டர் மூலம் இயக்கப்படும் இலேசர் கதிர்கள் மட்டுமே இதற்குப் பயன்படும். காயப்பட்ட பகுதியில் கொம்பியூட்டர் மூலம் தகவல்களைப் பதிவுசெய்து கொண்டு, அதற்குத்தேவையான அளவில் இலேசர் கதிர்களை காயத்தின் மீது பாய்ச்சித் தசைகளை இணைத்துவிடமுடியும்.

வழக்கமாகத்தோலிற் போடப்படும் தையல்,போட்டுத் தைப்பதெல்லாம் இனிமேல் அவசியமில்லாமல் போய்விடுகின்றது. இந்த முறையால் புண்களும் விரைவில் ஆறிவிடுகின்றதாம்.



படிப்பகம்

www.padippakam.com

❋❋ உலகப்புகழ் பெற்ற தேவதைக் கதையான 'சின்ரெல்லா' வைப்பற்றி உங்களிற் பலர் அறிந்திருப்பீர்கள். டிவியிலும் பார்த்திருப்பீர்கள். இது ஃபிரெஞ்சுமொழியில் எழுதப்பட்ட கதையாகும். பின்னரே மற்றைய மொழிகளில் மொழிபெயர்ப்புச் செய்யப்பட்டது இந்தக்கதையில் நள்ளிரவு பன்னிரெண்டு மணியடிக்கும் போது சின்ரெல்லா அரண்மனையிலிருந்து வீட்டுக்கு ஓடிவருகின்றாள். அப்போது அவளது காலில் அணிந்துள்ள காலணியொன்று தவறி விழுந்து விடுகின்றது. அது கண்ணாடியால் செய்யப்பட்டிருந்ததால் அதைக்கொண்டே இளவரசன் சின்ரெல்லாவைக் கண்டு பிடித்து மணந்து கொள்கின்றான். இதுதான் கதை.

இக் கதையில் வரும் கண்ணாடியினால் செய்யப்பட்ட காலணி என்பதில்.... கண்ணாடியினால் காலணி செய்யலாமா? செய்தால் அணிந்துகொண்டு நடக்கமுடியுமா? என்பதெல்லாம் யோசிக்க வேண்டியவிடயங்கள். ஃபிரெஞ்சுமொழியிலிருந்து மொழிபெயர்க்கும் போதுதான் இந்தக் கண்ணாடிக் காலணி வந்துவிட்டது. அந்தக் காலணி ஒருவகை மிருகத்தின் தோலினாலானது இதைப் ஃபிரெஞ்சில் VAIR என்பர். VAIR என்பதைVERREஎன்று மொழிபயர்ப்பாளர் எழுதி மொழிபெயர்த்தார்VERREஎன்பது கண்ணாடி என்று பொருள்.



படிப்பகம்

www.padippakam.com

மொழிபெயர்ப்பாளர் செய்த தவறினால் சிண்ரெல்லா கண்ணாடிச் சப்பாத்து அணிந்ததாக நாங்கள் படித்துக் கொண்டிருக்கின்றோம்.
****************************************

** ஆதிகாலத்தில் எகிப்துக்கு வந்த கிரேக்கர் பிரமிட்டுக்களைக் கண்டு ஆச்சரியப்பட்டார்கள். அவர்கள் கோதுமை மாவில் செய்யப்படும் ஒருவகைக் கேக்கைப் போலவே பிரமிட்டுக்களின் அமைப்பு இருந்தது. அவர்கள் கோதுமைக்கேக் என்ற அர்த்தத்தில் அதைப் 'பிரமிட்' என்று அழைத்தார்கள். அந்தப் பெயரே நிலைத்து விட்டது.

கிரேக்கர் எங்களுடைய நாட்டிற்கு வந்து நீத்துப்பெட்டிப் பிட்டைக் கண்டிருந்தால், அதையும் பிரமிட் என்றுதான் சொல்லியிருப்பார்கள்.

⊗ முதலாவதாகக் கல்வி என்றால் அது தன் தாய்மொழியில் புரிந்துகொள்ளவும், பேசவும், படிக்கவும், எழுதவும் கற்பிப்பதாக இருக்கவேண்டும்.

'எச்.ஜி.வெல்ஸ்'



படிப்பகம்

# பண்டிதரும்
# படகோட்டியும்

ஓர் ஊரில் கந்தசாமி என்பவர் வாழ்ந்துவந்தார். இவர் எந்த நேரமும் ஏதாவது ஒரு புத்தகத்தைப் படித்தபடிதான் இருப்பார். இதனால் இவரைப்பண்டிதர் என்று அந்த ஊர் மக்கள் அழைத்தார்கள்.

பண்டிதர் இலக்கணங்களுடன் நில்லாமல் பல்வேறு நூல்களையும் கற்றார். இவருக்குத் தெரியாத விடயங்களே இல்லை என்ற அளவில் இருந்ததால் பண்டிதருக்குத் தன்னைவிட ஆள் இல்லை என்ற கர்வம் ஏற்படத் தொடங்கிவிட்டது.



www.padippakam.com

ஒரு நாள் பண்டிதர் அடுத்த ஊருக்குச் செல்லவேண்டியிருந்தது. அடுத்த ஊருக்குச் செல்வதென்றால், ஆற்றைக் கடந்து செல்லவேண்டும். அதற்குப் படகில் செல்வது சுலபமானது. படகோட்டிகள் படகின் மூலம் இக்கரையிலிருந்து அக்கரைக்கு ஆட்களை ஏற்றிச் செல்வது வழக்கம். பண்டிதரும் படகோட்டி ஒருவனின் படகில் ஏறிஅமர்ந்து கொண்டார்.

படகு ஆற்றில் சென்று கொண்டிருந்தது. பண்டிதர் படகோட்டியிடம் பேச்சுக் கொடுக்கத்தொடங்கினார்.

'நீ வானசாத்திரம் படித்திருக்கின்றாயா? என்றார் பண்டிதர்.

வானசாத்திரமா? அப்படியென்றால் அது என்ன? என்று படகோட்டி பண்டிதரிடம் கேட்டான்.

'வானத்தில் உள்ள நட்சத்திரங்கள், சூரியன் சந்திரன் முதலியவற்றைப் பற்றிப் படிப்பது தான் வானசாத்திரம். இதை வானவியல் என்றும் சொல்லலாம் என்று பண்டிதர் விளக்கம் கொடுத்தார்.

தான் இதைப் படிக்கவில்லை என்று படகோட்டி பதில் சொன்னான்.

'உன்னுடைய வாழ்க்கையில் கால்பங்கு வீணாகிவிட்டது. அது தான் போகட்டும் தாவரசாத்திரமாவது படித்திருக்கின்றாயா? என்று பண்டிதர் தொடர்ந்தார்.



படிப்பகம்


www.padippakam.com

தாவரசாத்திரமா? அப்படியொன்றையும் தான் கேள்விப்படவில்லையே | என்று படகோட்டி சொன்னான்.
மரம் செடி கொடி முதலியனபற்றிப் படிப்பது தான் தாவரசாத்திரம் இதைப் படிக்காமல் உன்வாழ்க்கையின் அரைப்பகுதியை வீணாக்கிவிட்டாயே! என்றார் பண்டிதர்.
சரி வானசாத்திரம் தாவரசாத்திரம் இவைகளைத்தான் படியாது விட்டுவிட்டாய் பூமிசாத்திரம் ஆவது படித்திருக்கின்றாயா? என்று பண்டிதர் தொடர்ந்தார்.
பூமிசாத்திரமா? அதெல்லாம் நான் படிக்கவில்லை என்று படகோட்டி பதில் சொன்னான்.
பண்டிதருக்குக் கோபம் வந்துவிட்டது. 'என்ன முட்டாள்த்தனமான காரியம் செய்து விட்டாய்? உன் வாழ்க்கையின் முக்கால் பங்கை வீணாக்கிவிட்டாயே! என்று பண்டிதர் கடிந்து கொண்டார்.
இப்படி இவர்களின் உரையாடல் தொடர்ந்து கொண்டிருந்தபோது படகில் சிறு ஓட்டை ஏற்பட்டு ஆற்றுநீர் மடமடவென்று படகுக்குள் வந்துகொண்டிருந்தது. படகோட்டி இதைக் கவனித்துவிட்டான். 'ஐயா, உங்களுக்கு நீச்சல் தெரியுமா? என்று படகோட்டி பண்டிதரிடம் கேட்டான். நீச்சலா? எனக்குத் தெரியாதே என்று பண்டிதர் பதில் சொன்னார். அப்படியா உங்களுடைய வாழ்க்கை முழுவதும் வீணாகி விட்டது' என்று படகோட்டி சொன்னான். என்ன சொல்லுகின்றாய்? என்று பதறிக்கொண்டு பண்டிதர் கேட்டார். என்ன சொல்ல



படிப்பகம்

இருக்கின்றது? படகில் ஓட்டை ஏற்பட்டு அது ஆற்றில் கொஞ்சம்கொஞ்சமாக முழ்கிக் கொண்டிருக்கின்றது. எல்லாவிதமான படிப்பும் படித்திருந்தும் நீச்சல் கற்றுக் கொள்ளாததால் உங்கள் வாழ்க்கையே முடிந்து கொண்டிருக்கின்றது. என்று சொல்லியவாறு



படகோட்டி ஆற்றில் குதித்து நீந்தத் தொடங்கினான். தன்னை விட யாருமில்லை என்றிருந்த பண்டிதர் ஆற்றில் முழ்கி இறந்து போனார்.

www.padippakam.com



'ஆலும் வேலும் பல்லுக்குறுதி.
நாலும் இரண்டும் சொல்லுக்குறுதி'

இந்தப் பழமொழி பல்லையும் சொல்லையும் பற்றியது. ஆல்= ஆலமரத்தையும், வேல் வேப்பமரத்தையும் குறிக்கின்றன. ஆலமரத்தின் சிறியகொப்பு (குச்சி)ம் வேப்பமரத்தின் சிறிய கொப்பும் பல் துலக்குவதற்கு ஏற்றவை. இவற்றில் இயற்கையாகவே அமைந்துள்ள மருந்துகள் பல்லை வெள்ளையாக்குவதுடன், நோய்கள் வராமலும் தடுக்கின்றன.

நாலும் இரண்டும் சொல்லுக்கு உறுதி' என்பதில் நாம் நாலு என்பதற்கு நாலடியாரையும் இரண்டு என்பதற்குத் திருக்குறளையும் சொல்லி அவற்றைப் படித்தால் சொல் உறுதியாக இருக்கும் என்று சொல்லிக் கொள்கின்றோம். இதேவேளை தன்னுடைய தாத்தா நாலடியார், திருக்குறள் கற்றும் அவருடைய சொல்லொன்றும் தனக்கு விளங்கவில்லையே என்று சிறுமி ஒருத்தி வந்து எம்மிடம் கேட்கும் போதுதான், இந்தப்பழமொழியின் நாலையும் இரண்டையும் நாம் தேடிப்பார்க்க வேண்டியதாகின்றது.

இந்தப்பழமொழி பல்லையும் சொல்லையும் பற்றிச் சொல்ல வந்ததாகும். சொல்லுக்கு உறுதியை நாலடியாரும் திருக்குறளும் தரும் என்றால்? குழந்தைகள் கதைக்கத் தொடங்கும்



படிப்பகம்

போதே நாலடியாரையும் திருக்குறளையும் சொல்லிக் கொடுத்துவிடலாம். அப்படியா நடக்கின்றது? உண்மையிலே நாலடியாரும் திருக்குறளும் தமிழில் மிகச்சிறந்த நூல்கள் என்பதில் சந்தேகம் இல்லை.

ஆனால் ஏதோ சொல்ல வந்த பழமொழிக்குள் நாலடியார், திருக்குறள் இரண்டின் பெருமையையும் சேர்த்துக் கருத்தைக் குழப்பிவிட்டார்கள். நால்வது என்பது நாக்கு. ஒரு சொல்லை உச்சரிக்க நாக்குத்தான் முக்கியமானது. நாலடியாரும் திருக்குறளும் உச்சரிப்புக்காக எழுதப்பட்ட நூல்கள் அல்ல.

சிறுமியின் தாத்தாவிற்கு நாலடியாரிலும் திருக்குறளிலும் தெரியாத பகுதியே இல்லை. ஆனால் அவரால் சரியாக ஒரு சொல்லையும் உச்சரிக்கமுடியாதிருக்கின்றது. காரணம் என்னவாக இருக்கும் என்று தேடிப்பார்க்க வேண்டியதில்லை. தாத்தாவைப் பார்த்ததும் அவருக்குப் பல்லில்லை என்பது தெரிந்து விடுகின்றது. நாலும் என்பதில் நாக்கும், இரண்டும் என்பதில் பல்லுந்தான் சொல்லுக்கு உறுதி என்பது தெளிவாகின்றது.

பல்லை உறுதியாகவைத்திருக்க ஆலும் வேலும் தேவைப்படுகின்றன. சொல்லை உறதியாக வைத்திருக்க நாக்கும் பல்லுந் தேவைப்படுகின்றன. இதுவே பழமொழியின் உண்மையான கருத்தாகும். இதற்கு அடுத்தபடியிலே தான் நாலடியாரும் திருக்குறளும் தேவைப்படுகின்றன. *

www.padippakam.com

வாழும் சூழல் உயிரினங்கள் அனைத்தையும் பாதிக்கவே செய்கின்றது. பென்குவின் பறவைகளின் மூதாதையர் பறந்திருக்கின்றார்கள். பென்குவின் பறவைகள் கடற்கரைகளில் வாழ்வதாலும் கடலுக்குள் நீந்தக்கூடியதாகவும், உடலமைப்பும் மாறிவிட்டது. அவற்றின் கால்களும் பறக்க முடியாதனவாகி அமைந்து விட்டன. பென்குவின்களுக்குச் சிறகை வைத்துக் கட்டிவிட்டாலும் அவற்றால் பறக்க முடியாது. ஏன் என்றால் பறப்பதை அவர்கள் மறந்து பல ஆயிரம் வருடங்களாகிவிட்டன.

***************************************

யானைக்கு ஞாபகசக்தி அதிகம். அது எதையும் மறந்துவிடாது என்ற நம்பிக்கை நிலவுகின்றது. ஆனால் ஆராய்ச்சியாளர்கள் குதிரை பசு நாய் இவைகளைவிட யானைக்கு ஞாபக சக்தி குறைவு என்கிறார்கள். விலங்கினங்களில் குரங்குதான் ஞாபகசக்தி அதிகம் உள்ளது.

***************************************

திராட்சைப்பழந்தான் மிக மிகப் பழங்காலத்திலிருந்து இன்றும் தொடர்ந்து இருக்கின்ற பழமாகும். இன்று பல பழங்கள் உணவாகவும் பானமாகவும் பயன்பட்டாலும் அவற்றிற்கெல்லாம் முன்னோடியாகத் திராட்சைப்பழந்தான் இருந்திருக்கின்றது.

*************************************



படிப்பகம்

## பழமொழிகள்

1) அகத்தின் அழகு முகத்தில் தெரியும்.

அகம்=என்பது மனம் என்ற பொருளில் வந்துள்ளது. ஒருவருடைய மனதில் இருப்பதை அவரது முகம் காட்டிவிடும் என்பதே இதன் கருத்தாகும்.

2) 'இளமையில் கல்வி சிலையில் எழுத்து'

இளமையில், இளம் வயதிற் கற்கின்ற கல்வி சிலையில், கல்லில் எழுதுகின்ற எழுத்தைப்போல அழியாதது. கல்வியை இளம் வயதிலே கற்றுக் கொள்ள வேண்டும். அது அழியாமல் மறையாமல் பயன் உள்ளதாக இருக்கும். இளம் வயதினரான சிறுவர்கள், நீங்கள் கற்கின்ற கல்வியும் சிலையில் எழுதியதாக அழியாமல் இருக்கும்.

3) 'அழுதபிள்ளை பால்குடிக்கும்'

கஸ்டப்படுபவர்கள் பின்னர் சநதோசமாக இருப்பார்கள் என்ற கருத்தை இலகுவாகச் சொல்ல இந்தப் பழமொழி வழங்கப்படுகின்றது. அழாத பிள்ளை பால் குடிப்பதில்லையா? தற்போது அழுபவர்கள் நாளைக்குச் சந்தோசமாக இருப்பார்கள் என்று இப் பழமொழி மனதில் உறுதி தருகின்றது

நன்றாகக் கற்பிப்பதென்றால் எந்தவிடயத்தைக் கற்பித்தாலும் எனக்குக் கவலையில்லை.

'ஹக்ஸ்லி'

www.padippakam.com

** வௌவால்களின் செவிகள் மிகக் கூர்மையானவை. எப்படியான மெல்லிய சத்தமும் அவைகளால் உடனே அறியப்பட முடிகின்றது. காதின் உதவியுடனே அவை இருட்டிலும் பறந்து திரிய முடிகின்றது.

** ஆரம்பகாலங்களில் நோயாளிகளுக்கு மதுவகைகளைப் பருக்கி மயக்கம் ஏற்படுத்தியே அறுவைச்சிகிச்சை (ஒப்பறேசன்) செய்தார்கள்.

** இன்றைய உலகில் போட்டஸ்ரட் முக்கியமானதாகிவிட்டது. இதன் உண்மைப் பெயர் XEROX என்பதாகும். இதற்கு ஈரமில்லா உலர்ந்த பிரதி என்று அர்த்தம். புகைப்படம் (போட்டோ) எடுப்பது போன்ற முறையில் இது இருந்தாலும் புகைப்படம் கழுவத் தேவையான இரசாயனத் திரவங்கள் எதுவும் பயன் படுத்தாமல் இது பிரதி செய்கின்றது.

கட்டைகளைப் புரட்டிப் போட்டால் நெருப்பு நன்றாக எரியும். அதேபோலப் படிக்கும் விடயங்களையும் மாற்றிக்கொண்டால் அயர்ந்துள்ள மூளையும் எழுச்சி பெறும்.

'லாங்ஃபெல்லோ'



படிப்பகம்

⊗ தீயவன் ஒருவன் ஞானி போல நடிக்கும்போது இன்னும் மோசமாகிவிட்டான்.

'பேக்கன்'

அட்டைப்படம்


தமிழர்களைத் திருப்பியனுப்ப முன்னர், அவர்களுடைய நாட்டில் அமைதி ஏற்படவேண்டும். அதை ஏற்படுத்த இந்த நாடுகள் இலங்கையரசை நிர்ப்பந்திக்க வேண்டும். அரசியல் தீர்விற்காக நெருக்க வேண்டும். தீர்வு ஏற்பட்டுவிட்டால் திரும்பிச் செல்வதில் எந்தவித மறுப்பும் இல்லை என்று அட்டைப்படத்தின் மூலம் 'சிறுவர்அமுதம்' தமிழர்களின் நிலையைக் காட்டுகின்றது.

இதுவரைநாளும் ஜேர்மன் அரசு எம்மை ஆதரித்தவற்றை நாம் மறந்திடக்கூடியதாக இந்தத்திருப்பியனுப்புதல் இடம் பெறக் கூடாது. மேலும் நாங்கள் இன்னும் நன்றி உணர்வோடு இருக்கக்கூடியதாக, எமது நாட்டில் அமைதியை ஏற்படுத்துவதிலும் ஜேர்மனிக்குப் பங்கு இருக்கின்றது.

www.padippakam.com

# KINDERFREUNDLICH MAGAZINE AMUTHAM

## NO 19



இலங்கை நாடு எம் நாடு
இனிய எங்கள் தாய் நாடு
அழகு மலைகள் நிறை நாடு
ஆறுகள் பாய்வது எம் நாடு
மழை வளம் உள்ளது எம் நாடு
மண் வளம் உள்ளது எம் நாடு
நெல்லொடு தேயிலை, தென்னை, பனை
நிலையாய் ஓங்கும் எம் நாடு

---

தொடர்புகளுக்கு

SIRUVARAMUTHAM,
IM WINKEL-2,
5013 ELSDORF/RHLD
Tel...02271/66527

# CHILDREN LITE RATURE MAGAZINE

படிப்பகம்